பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

சிறுபான்மையினர் நலன்

# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2024 – 2025

மானியக் கோரிக்கை எண். 9

## செஞ்சி கே.எஸ். மஸ்தான்

சிறுபான்மையினர் நலன் மற்றும்
வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்

©
தமிழ்நாடு அரசு
2024

# பொருளடக்கம்


| வ. எண் | பொருள் | பக்கம் |
| --- | --- | --- |
| 1. | முன்னுரை | 1 |
| 2. | பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இட ஒதுக்கீடு | 8 |
| 3. | கல்வி உதவித் தொகை | 9 |
| 4. | சிறுபான்மையினர் விடுதிகள் | 23 |
| 5. | மாண்புமிகு முதலமைச்சரின் சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனை கூட்டம் | 33 |
| 6. | முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம் | 35 |
| 7. | கிறித்துவ மகளிர் உதவும் சங்கம் | 38 |
| 8. | உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நலவாரியம் | 40 |
| 9. | கிராமப்புற சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத் தொகை வழங்குதல் | 46 |
| 10. | சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குதல் | 47 |
| 11. | ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கான நிதியுதவி | 48 |

| | | |
|---|---|---|
| 12. | கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம் | 49 |
| 13. | தொன்மையான தேவாலயங்கள் புனரமைத்தல் திட்டம் | 51 |
| 14. | கபர்ஸ்தான் மற்றும் கல்லறைத்தோட்டம் அமைத்தல் | 52 |
| 15. | கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் | 52 |
| 16. | கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் | 53 |
| 17. | மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல் | 58 |
| 18. | பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் | 58 |
| 19. | பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம் ) | 61 |
| 20. | சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து | 65 |
| 21. | தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 66 |

| | | |
|---|---|---|
| 22. | தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் | 68 |
| 23. | தமிழ்நாடு மொழி வழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் (டால்மெட்கோ) | 77 |
| 24. | தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 77 |
| 25. | தமிழ்நாடு மாநில ஹஜ் குழு | 96 |
| 26. | இணைப்பு | 106 |

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 9

## சிறுபான்மையினர் நலன் கொள்கை விளக்கக் குறிப்பு - 2024-2025

### 1. முன்னுரை

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்" - குறள் 388

தமிழ்நாடு அரசு சிறுபான்மையினரின் பாதுகாவலராகவும், இம்மக்களின் உரிமைகள் மற்றும் நலன்களைப் பாதுகாப்பதில் முன்னோடியாகவும் திகழ்கிறது. இவ்வரசு சிறுபான்மையினர் வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் ஏற்றம் பெறுவதை உறுதி

செய்யவும் மத நல்லிணக்கத்தினை தொடர்ந்து பேணவும் உறுதி பூண்டுள்ளது.

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற தமிழ் தத்துவத்தின் வழி நடக்கும் தமிழ்நாடு அரசு, வேற்றுமையில் ஒற்றுமை கொண்ட சமூதாயத்தை காண்பதற்குரிய சூழலை உருவாக்குவதில் உறுதி கொண்டுள்ளது.

சிறுபான்மையினரின் சமூக, கல்வி, பொருளாதார நிலைகளை மேம்படுத்துவதற்கென இவ்வரசு பல்வேறு திட்டங்கள் மற்றும் முயற்சிகளை தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது.

இவ்வரசால் சிறுபான்மையினர் நலனுக்கென மேற்கொள்ளப்பட்ட முன்னெடுப்புகளின் விவரம் பின்வருமாறு:

- மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.

- தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 1999-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது.
- சிறுபான்மையினர் மீது கூடுதல் கவனம் செலுத்தும் பொருட்டு 1999 ஆம் ஆண்டில் இத்துறை "பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை" என்பதிலிருந்து "பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை" என மாற்றம் செய்யப்பட்டது.
- வக்ஃப் நிறுவனங்களை பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் ஆண்டு மானியம் வழங்கும் திட்டம் 1999 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது.
- 2007-ஆம் ஆண்டில், சிறுபான்மையினர் நலனுக்கான தனி இயக்குநரகம் நிறுவப்பட்டது
- 2007-இல் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டது.

- ஆதரவற்ற முஸ்லிம் பெண்களுக்கு உதவிகள் வழங்க அனைத்து மாவட்டங்களிலும் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் 2007-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டன.
- 2009-ஆம் ஆண்டில் உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் ஏற்படுத்தப்பட்டது.
- 2009-ஆம் ஆண்டில் முஸ்லிம் மாணவியருக்கென விடுதிகள் தொடங்கப்பட்டன.
- 2022-ஆம் ஆண்டில் கிறித்துவ உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் உருவாக்கப்பட்டுள்ளது.
- 2022-2023-ஆம் ஆண்டில் 3 முதல் 6 ஆம் வகுப்பு வரை பயிலும் கிராமப்புற சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

- 2023-2024-ஆம் ஆண்டு முதல் கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்துக்கான நிரந்தர சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன.
- கிறித்துவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் மாவட்ட தலைநகரங்களில் மாவட்ட நிர்வாகத்தின் மூலம் அமைத்துத் தர ஆணையிடப்பட்டுள்ளது
- 2023-2024-ஆம் ஆண்டு முதல் கபர்ஸ்தான் மற்றும் அடக்கஸ்தலங்களுக்கு புதிதாக சுற்றுச்சுவர் மற்றும் புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது.
- அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் மற்றும் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை

பயிலும் முஸ்லிம் மாணவியருக்கு தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் வக்ஃப் வாரியம் மூலம் கல்வி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இத்துறையின் மூலம் சிறுபான்மையினர் நலனை கருத்தில் கொண்டு இஸ்லாமியர்களுக்கு ஹஜ் யாத்திரைக்கும் கிறித்துவர்களுக்கு ஜெருசலேம் புனிதப் பயணத்திற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது. ஆதரவற்ற கிறித்துவப் பெண்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. மசூதிகள் மற்றும் தேவாலயங்களை பழுதுபார்ப்பதற்கும் புதுப்பிப்பதற்கும் மானியம் அளிக்கப்படுகிறது. தமிழ்நாடு வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

சிறுபான்மையினருக்கென பிரதமரின் புதிய 15 அம்சத் திட்டம் மற்றும் நீதிபதி ராஜிந்தர் சச்சார் கமிட்டியின் பரிந்துரைகளை செயல்படுத்த உரிய

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒன்றிய அரசின் சிறுபான்மையினருக்கான பிரதான் மந்திரி ஜன் விகாஸ் காரியக்ரம் (PMJVK) திட்டம் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் சிறுபான்மையின மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள் சிறுபான்மையின மாணவர்களை மேம்படுத்தும் வண்ணம் செயல்படுத்தப்படுகிறது.

நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகள் (Sustainable Development Goals) 2015-ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் (UNGA) முன்வைக்கப்பட்டது, அனைவருக்கும் சிறந்த மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட 17 இலக்குகள் உள்ளன. இவற்றில், இலக்கு-1 (வறுமை ஒழித்தல்), இலக்கு-4 (தரமான கல்வி) மற்றும் இலக்கு-10 (ஏற்றத்தாழ்வுகளை

குறைத்தல்) ஆகியவை இந்தத் துறையுடன் நேரடியாக தொடர்புடையவை. இந்த நிலையான நீடித்த வளர்ச்சி இலக்குகளின் நோக்கத்தை அடைய இத்துறை உறுதியான நடவடிக்கையை மேற்கொள்ளும்.

## 2. பிற்படுத்தப்பட்ட வகுப்பு இஸ்லாமியர்களுக்கு தனி இடஒதுக்கீடு

இஸ்லாமிய மக்கள் கல்வி நிலையிலும் பொருளாதார ரீதியாகவும் முன்னேற்றம் அடைய வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு இஸ்லாமிய மக்களின் நீண்ட நாள் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக 2007 ஆம் ஆண்டில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு வழங்கப்பட்டு வந்த 30 விழுக்காடு இடஒதுக்கீட்டிலிருந்து பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு கல்வி மற்றும் வேலைவாய்ப்புகளில் 3.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டு தனி இட ஒதுக்கீடு வழங்கப்பட்டு வருகிறது. அரசுப்

பணிகளில் நேரடி நியமனங்களில் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கு முன்கொணர்வு முறையினை (Carry forward procedure) பின்பற்றிட வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது.

### 3. கல்வி உதவித் தொகை

"யாதானும் நாடாமால் ஊராமால் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு" - குறள் 397

சிறுபான்மையின மாணவ, மாணவியர் கல்வியினை இடைவிடாது தொடர்ந்து பயிலும் வகையில் 9-ஆம் வகுப்பு முதல் தொழிற்கல்வி, ஆராய்ச்சிப் படிப்பு வரை அரசு, அரசு உதவி பெறும் மற்றும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் பயிலும் கிறித்தவர், இஸ்லாமியர், சீக்கியர், புத்த மதத்தினர், பார்சி மற்றும் சமண மதங்களைச் சார்ந்தவர்களுக்கு ஒன்றிய அரசின் பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம், பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைத் திட்டம் மற்றும் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித்

தொகைத்திட்டம் ஆகிய 3 வகையான கல்வி உதவித்தொகை திட்டங்கள் ஒன்றிய அரசின் 100% நிதிப் பங்களிப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாநிலங்களின் சிறுபான்மையினர் மக்கள் தொகையின் (2011) அடிப்படையில் நிதி ஒன்றிய அரசால் பகிர்ந்தளிக்கப்படுகிறது. மேற்கண்ட திட்டங்களின் கீழ், கல்வி உதவித் தொகை நேரடி பயன்மாற்று முறையில் (Direct Benefit Transfer) ஒன்றிய அரசால் மாணவ, மாணவியரின் வங்கிக் கணக்கில் நேரடியாக செலுத்தப்படுகிறது. மொத்த கல்வி உதவித் தொகையில், ஒவ்வொரு சிறுபான்மையின உட்பிரிவில் குறைந்தபட்சம் 30 விழுக்காடு மாணவிகளுக்கு ஒதுக்கப்படும். ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் வசிக்கும் ஒரு மாணவர், அவர் படிக்கும் இடத்தின் அடிப்படையில் அல்லாமல் அவரின் சொந்த மாநிலத்திற்கான ஒதுக்கீட்டின் கீழ் மட்டும் உதவித் தொகை பெற தகுதியுடையவராவார்.

## கல்வி உதவித் தொகைகளின் விவரம் பின்வருமாறு

| கல்வி உதவித் தொகை விவரம் | பயிலும் வகுப்புகள் | பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு | கல்வி உதவித் தொகை பெறுவதற்கான தகுதி |
|---|---|---|---|
| பள்ளிப் படிப்பு | 9 முதல் 10 ஆம் வகுப்பு வரை | ரூ.1 இலட்சம் | முந்தைய ஆண்டின் இறுதி தேர்வில் 50 விழுக்காட்டிற்கு குறையாமல் மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். |
| பள்ளி மேற் படிப்பு | 11 முதல் ஆராய்ச்சி படிப்பு வரை | ரூ. 2 இலட்சம் | |
| தகுதி (ம) வருவாய் அடிப்படை | தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி | ரூ. 2.5 இலட்சம் | |

### 3.1 பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகை

சிறுபான்மையினர் நலனுக்கென பள்ளிப் படிப்பு கல்வி உதவித்தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2008-2009 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டு, 2021-2022 ஆம் ஆண்டு வரை ஒன்றாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு

வரை பயிலும் மாணவ மாணவியருக்கு செயல்படுத்தப்பட்டு வந்தது. ஒன்றிய அரசு, கல்வி உரிமைச் சட்டம் 2009-ன்படி தொடக்கக்கல்வி (1 முதல் 8 ஆம் வகுப்பு வரை) அனைத்து குழந்தைகளுக்கும் அரசாங்கம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிப்பதை கட்டாயமாக்கியுள்ளது என்று தெரிவித்து 2022-2023 ஆம் ஆண்டு, 1 முதல் 8 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு கல்வி உதவித் தொகை வழங்குவதை நிறுத்தி, 9 மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கு மட்டுமே கல்வி உதவித் தொகை வழங்குகிறது. இவ்வரசு, மேற்கண்ட ஒன்றிய அரசின் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என்றும், 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்பட வேண்டும் என்றும் ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகிறது.

இருப்பினும், மாநில அரசு 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர்களுக்கு, தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் வக்ஃப் வாரியம் மூலம் கல்வி உதவி தொகைகளை வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியலின் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய

வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| விவரம் | விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ/ மாணவியர் | விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர் |
|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புக்கு சேர்க்கைக் கட்டணம் | மாணவ,மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.500<br>(இவற்றில் எது குறைவோ) | |
| ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்புக்கு கற்பிப்பு கட்டணம். | மாணவ,மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது ஆண்டொன்றுக்கு அதிகபட்சமாக ரூ.3,500<br>(இவற்றில் எது குறைவோ) | |

| | | |
|---|---|---|
| ஒன்பதாம் வகுப்பு மற்றும் பத்தாம் வகுப்பு<br>ஒரு கல்வியாண்டில் 10 மாதங்களுக்கான பராமரிப்பு கட்டணத் தொகை | ரூ.6,000 | ரூ. 1,000 |

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ/ மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 46482 மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ. 12.72 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான பள்ளிப்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

**3.2 பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகை**

மேல்நிலைப் பள்ளிக் கல்வி, தொழில்நுட்பப் பட்டயப் படிப்பு, தொழிற்பயிற்சி, ஆசிரியர் பயிற்சி,

இளங்கலை, முதுகலை பட்டப்படிப்பு, ஆராய்ச்சிப் படிப்பு, ஆகியவற்றைப் பயிலும் சிறுபான்மையினத்தைச் சார்ந்த மாணவ, மாணவியருக்கு பள்ளி மேற்படிப்புக் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. இக்கல்வி உதவித் தொகை திட்டம் ஒன்றிய அரசால் 2007-2008 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.

ஒரு வருடத்தில் இத்திட்டத்தின் கீழ் சிறுபான்மையினருக்கான புதிய கல்வி உதவித் தொகை பெறுபவர்களின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. மதிப்பெண்களை விட வறுமைக்கு முன்னுரிமை வழங்கி தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் கல்வி உதவித் தொகை ஒப்பளிக்கப்படுகிறது. சமமான வருமானம் இருப்பின், விண்ணப்பதாரரின் 'பிறந்ததேதி' அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) சேர்க்கை/கற்பிப்பு கட்டணம் மற்றும் பராமரிப்பு கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| **விவரம்** | **கற்பிப்பு மற்றும் சேர்க்கை கட்டணம் ரூ.** | **பராமரிப்பு கட்டணம் (10 மாதங்களுக்கு)** | |
|---|---|---|---|
| | | **விடுதியில் தங்கி பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.** | **விடுதியில் தங்காமல் பயிலும் மாணவ/ மாணவியர் ரூ.** |
| 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஒரு ஆண்டிற்கு ரூ.7,000 (இவற்றில் எது குறைவோ) | 3,800 | 2,300 |

| | | | |
|---|---|---|---|
| 11 ஆம் மற்றும் 12 ஆம் வகுப்பு, தொழில்நுட்ப / தொழிற் கல்வி படிப்புகள், ஐடிஐ, ஐடிசி (என்சிவிடி) பாலிடெக்னிக், செவிலியர் டிப்ளமோ, ஆசிரியர் பயிற்சி போன்றவை. | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.10,000 (இவற்றில் எது குறைவோ) | 3,800 | 2,300 |
| இளநிலை / முதுகலை பட்டப்படிப்புகள் (தொழில்நுட்பம் / தொழிற்கல்வி தவிர) | மாணவ, மாணவியரால் செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ.3,000 (இவற்றில் எது குறைவோ) | 5,700 | 3,000 |
| எம்.பில் மற்றும் பி.எச்.டி | - | 12,000 | 5,500 |

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ / மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 13530 மாணவ/ மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ரூ.7.92 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான பள்ளி மேற்படிப்பு கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

## 3.3 தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம்

உயர் மதிப்பெண்கள் பெற்று தொழிற்கல்வி மற்றும் தொழில்நுட்ப கல்வி பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைத் திட்டம் 2007-2008-ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது.

தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் ஒன்றிய அரசு நிதி உதவியுடன் அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் தொழில்நுட்பம் / தொழிற் கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படுகிறது.

ஒரு வருடத்தில் வழங்கப்படும் சிறுபான்மையினருக்கான புதிய கல்வித் தொகைகளின் எண்ணிக்கை நிலையானது மற்றும் வரையறுக்கப்பட்டுள்ளது. பட்டியலிடப் பட்ட கல்வி நிலையங்களுக்கு (ஐஐடி, ஐஐஎம், என்.ஐ.எஃப்.டி போன்றவை) கல்வி உதவித் தொகைகள் முதலில் ஒப்பளிக்கப்படும். பிற மாணவர்களுக்கு தகுதி அடிப்படையில் அதாவது முந்தைய படிப்பு தேர்வில் (மேல்நிலை / பட்டப்படிப்பு) அவர்கள் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட தகுதி பட்டியல் அடிப்படையில் ஒப்பளிக்கப்படுகிறது. மதிப்பெண்கள் சமமாக இருப்பின், பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானத்தின் அடிப்படையில் தகுதி பட்டியல் தயாரிக்கப்படுகிறது.

புதுப்பித்தல் விண்ணப்பங்களுக்கு தகுதி பட்டியல் தயாரிக்கும் நடைமுறை இல்லை. புதுப்பித்தல் விண்ணப்பதாரர் தனது முந்தைய

வருட தேர்வுகளில் 50% பெற்றிருப்பின் (அதே கல்வி நிலையத்தில் அதே பாட நெறியில் பயிலும் நிலையில்) கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இக்கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் பட்டியலிடப்பட்ட

1. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (ஐஐடி) - சென்னை
2. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி (என்.ஐ.டி) - திருச்சி
3. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் இன்ஃபர்மேஷன் டெக்னாலஜி, டிசைன் & மேனுஃபேக்சரிங் (ஐஐஐடிடி & எம்) - காஞ்சிபுரம்
4. நேஷனல் இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டெக்னாலஜி (என்.ஐ.எஃப்.டி) - சென்னை
5. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் மேனேஜ்மென்ட் (ஐஐஎம்) - திருச்சி

உள்ளிட்ட 85 கல்வி நிறுவனங்களில் (Listed Institutions) பயிலும் சிறுபான்மையின மாணவ, மாணவியருக்கான கல்விக் கட்டணங்கள் முழுவதுமாக வழங்கப்படுகிறது.

ஏனைய அரசு/அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் கல்விக் கட்டணம் மற்றும் பராமரிப்புக் கட்டணம் ஆகியவற்றிற்கான நிதி உதவி அதிகபட்ச வரம்புக்கு உட்பட்டு கீழ்க்கண்டவாறு வழங்கப்படும்.

| நிறுவனங்கள் | கல்விக் கட்டணம் ரூ | பராமரிப்பு கட்டணம் (கல்வி ஆண்டில் 10 மாதங்களுக்கு மட்டும்) | |
|---|---|---|---|
| | | விடுதியில் தங்கி பயில்பவர்கள் | விடுதியில் தங்காமல் பயில்பவர்கள் |
| ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட தொழிற் கல்வி/தொழில் நுட்பக் கல்வி நிலையங்கள் (Listed Institutions) | செலுத்தப்பட்ட கல்வி கட்டணம் முழுவதும் திருப்பி செலுத்தப்படும் (உச்சவரம்பின்றி) | ரூ. 10,000 | ரூ. 5,000 |
| இதர கல்வி நிறுவனங்கள் | செலுத்தப்பட்ட கட்டணம் அல்லது அதிகபட்சம் ஆண்டிற்கு ரூ. 20,000 (இவற்றில் எது குறைவோ) | ரூ. 10,000 | ரூ. 5,000 |

இத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் ஒன்றிய அரசிற்கு அனுப்பப்பட்ட மாணவ / மாணவியர் விண்ணப்பங்களில், இதுவரை 3319 மாணவ / மாணவியர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.8.58 கோடி வழங்கப்பட்டுள்ளது.

2023-24 ஆம் ஆண்டிற்கான தகுதி மற்றும் வருவாய் அடிப்படையிலான கல்வி உதவித் தொகைக்கான விண்ணப்பம் பெறும் பணி ஒன்றிய அரசால் விரைவில் தொடங்கப்பட உள்ளது.

## 4. சிறுபான்மையினர் விடுதிகள்

கிராமப்புறங்களை சேர்ந்த சிறுபான்மையின மாணவியர்கள் நகர்புறங்களில் தங்கி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக சத்தான உணவுடன் இலவச உறைவிடம் வழங்கி 16 மாவட்டங்களில் மொத்தம் 17 விடுதிகள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளில் சேருவதற்கான பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திலிருந்து

ரூ.2 இலட்சமாக 2021-2022 ஆம் ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது.

மொத்தமுள்ள 17 விடுதிகளில் 1 விடுதி மாணவர் விடுதி, 16 விடுதிகள் மாணவியர் விடுதிகள் ஆகும்.

விடுதிகளின் விவரம் பின்வருமாறு:

| **விடுதி** | **விடுதிகளின் எண்ணிக்கை** | **ஒப்பளிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை** | **அனுமதிக்கப்பட்ட மாணவ/ மாணவியரின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| கல்லூரி | 8 | 800 | 708 |
| பள்ளி மற்றும் கல்லூரி | 5 | 250 | 241 |
| பள்ளி | 4 | 350 | 224 |
| **மொத்தம்** | **17** | **1,400** | **1173** |

2024-25 ஆம் நிதியாண்டில் சென்னை மற்றும் கோயம்புத்தூரில் இரண்டு சிறுபான்மையினர் மாணவர் விடுதி துவங்க

ஆணையிடப்பட்டு விடுதிகள் துவங்கப்படவுள்ளன.

ஒவ்வொரு விடுதியிலும் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு தலா 5 இடங்கள் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளன. இவ்விடுதிகளில்' ஒப்பளிக்கப்பட்ட எண்ணிக்கைக்குக் கூடுதலாக 10 விழுக்காடு இடங்களில் மாணவ, மாணவியரைச் சேர்க்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு விடுதியிலும் 4 சதவீத இடங்கள் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.மேலும் மீட்கப்படும் குழந்தைத் தொழிலாளர்கள், விடுதிகளில் கல்வி ஆண்டின் இடையிலும் எந்தவித நிபந்தனைகளும் இல்லாமல் சேர்த்துக் கொள்ளவும், படிப்பு முடியும் வரை தங்கிப் பயிலவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டு கேரள எல்லையோரப் பகுதியில் உள்ள மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தோட்டத் தொழிலாளர்களின் குழந்தைகளை தேனி மாவட்டத்தில் உள்ள விடுதிகளில் சேர்ப்பதற்கு ஏதுவாக, சாதி மற்றும் வருமானச் சான்றிதழ் அளிப்பதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டு அவர்களின் பெற்றோர் அளிக்கும் சுய உறுதி மொழி ஏற்கப்படுகிறது.

2023-2024-ஆம் ஆண்டில், அனைத்து கல்லூரி விடுதிகளில் பயிலும் முதல் ஆண்டு தவிர்த்து பிற மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சிகள் 548 மாணவ/ மாணவியருக்கு வழங்கப்பட்டன.

## 4.1 உணவுக்கட்டணம்

பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு உணவுக் கட்டணம்

மாதமொன்றுக்கு ரூ.1000-லிருந்து ரூ.1,400 ஆகவும், கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூ.1100-லிருந்து ரூ.1,500 ஆகவும் 23.01.2024 முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஆண்டில் 10 மாதங்களுக்கு உணவுக்கட்டணம் வழங்கப்படுகிறது.

2021-2022 ஆம் ஆண்டு முதல் விடுதி மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை, எண்ணெய் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.50-லிருந்து ரூ.100 ஆகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.75-லிருந்து ரூ.150 ஆகவும் இருமடங்காக உயர்த்தப்பட்டு வழங்கப்படுகிறது.

பண்டிகை நாட்களில் (கிறிஸ்துமஸ், ரம்ஜான், பக்ரித், மஹாவீர் ஜெயந்தி மற்றும் புத்த பூர்ணிமா) சிறப்பு உணவு கட்டணமாக, ஒரு

பண்டிகைக்கு பள்ளி மாணவ, மாணவியருக்கு ரூ.40-ம், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.80-ம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

2023-2024 ஆம் ஆண்டில், விடுதிகளின் உணவு கட்டணம், நிர்வாகம், பராமரிப்பு மற்றும் பிற பணிகளுக்காக ரூ.451.64 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்டத்தில் சிறுபான்மையினர் நல விடுதிக்கு ரூ.495.64 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.2 விடுதி மாணவ, மாணவியர் பெறும் இதர பயன்கள்

1. விடுதிகளில் தங்கிப்பயிலும் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியர் பொதுத் தேர்வில் சிறந்த மதிப்பெண்கள் பெற்றிட, அவர்களுக்கு சிறப்பு வழிகாட்டி மற்றும் வினாவங்கி நூல்கள் வழங்கப்படுகின்றன.

2. ஒவ்வொரு விடுதிக்கும் ஒரு ஆங்கிலம் மற்றும் இரண்டு தமிழ் நாளிதழ்கள் வழங்கப்படுகின்றன.

3. விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்குப் பன்னிரெண்டாம் வகுப்பு வரை அனைத்து பாடப் புத்தகங்களும் பள்ளிக் கல்வித் துறையால் வழங்கப்படுகின்றன.

4. 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு, நான்கு இணை சீருடைகள் வழங்கப்படுகின்றன.

5. விடுதிகளில் அவசர பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ள விடுதி ஒன்றுக்கு ஓராண்டிற்கு ரூ.50,000 வழங்கப்படுகிறது.

6. பள்ளி விடுதியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு பாய்களும், கல்லூரி விடுதியில் முதலாம் ஆண்டு பயிலும் மாணவ, மாணவியருக்கு ஜமக்காளங்களும் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி விடுதியில் பயிலும் மாணவ,

மாணவியருக்கு 2 ஆண்டிற்கு ஒருமுறை போர்வைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

7. அனைத்து விடுதி மாணவ, மாணவியருக்கு ஆண்டு தோறும் மூன்று முறை மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன. இதற்கென வழங்கப்படும் இடைநிகழ்வு செலவினத் தொகை 2022-2023 ஆம் ஆண்டிலிருந்து ஆண்டிற்கு ரூ.1,000-லிருந்து ரூ.3,000 ஆக உயர்த்தப்பட்டது.

8. பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் நூலகப் புத்தகங்கள், விளையாட்டு பொருட்கள், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, மாவரைக்கும் இயந்திரம், மின்அரைப்பான், நீர் சுத்திகரிப்புக் கருவி, சுகாதார குட்டைத்தகளி, தீயணைப்பான் கருவிகள், இட்லி வேகவைப்பான்கள் மற்றும் பூச்சி அழிப்பான் மின் கருவி ஆகியன வழங்கப்படுகின்றன. இவற்றுடன் கல்லூரி விடுதிகளுக்கு மின்நூல்களை இணைய வழியில் படிப்பதற்கு ஏதுவாக கணினி மற்றும் இதர உபகரணங்கள், இரண்டடுக்கு

கட்டில்கள், இன்வர்ட்டர் கருவி, பார்வை குறிப்புப் புத்தகங்கள், உடனடி மாவரைக்கும் இயந்திரம் மற்றும் நீராவி கொதிகலன், உடற்பயிற்சி விளையாட்டு உபகரணங்கள் மற்றும் எல்.இ.டி தொலைக்காட்சி DTH இணைப்புகள் வழங்கப்படுகின்றன.

9. 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மற்றும் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு வேலைவாய்ப்புகள் பெறுவதற்காக நடத்தப்படும் பல்வேறு போட்டித் தேர்வுகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

10. ஒவ்வொரு மாதத்தின் முதல் மற்றும் மூன்றாம் புதன்கிழமைகளில் ஆட்டிறைச்சியும், இரண்டாம் மற்றும் நான்காம் புதன்கிழமைகளில் கோழி இறைச்சியும் வழங்கப்படுகின்றன.

11. மாணவ, மாணவியர் ஒருவருக்கு ஒரு மாதத்திற்கு 20 முட்டைகள்

வழங்கப்படுகின்றன. முட்டை சாப்பிடாதவர்களுக்கு வாழைப்பழங்கள் வழங்கப்படுகின்றன.

12. மாலை நேர சிற்றுண்டியாக தினந்தோறும் சுண்டல் மற்றும் சுக்குமல்லி காபி / தேநீர் வழங்கப்படுகின்றன.

## 4.3 விடுதிகளுக்கு சொந்தக்கட்டடங்கள் கட்டுதல்

இத்துறையின் கீழ் இயங்கி வரும் 17 சிறுபான்மையினர் விடுதிகளில் 11 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன. மீதமுள்ள 6 விடுதிகளுக்கு மாணவ, மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

## 4.4 விடுதி கட்டடங்கள் பராமரிப்புப் பணிகள்

பொதுப்பணித்துறை மூலம் அரசு சொந்தக் கட்டடங்களில் இயங்கி வரும் விடுதிகளின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2023-2024 ஆம் ஆண்டில் விடுதிகளுக்கு சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் பணிகள்

ரூ.1 கோடி மதிப்பீட்டில் 9 விடுதிகளில் பொதுப்பணித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 5. மாண்புமிகு முதலமைச்சரின் சிறுபான்மையினர் நலன் குறித்த ஆலோசனை கூட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறுபான்மையினர் நலன் தொடர்பாக பல்வேறு கிறித்துவ திருச்சபை அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகளுடன் 09.01.2024 அன்றும், இஸ்லாமிய அமைப்புகளை சார்ந்த பிரதிநிதிகளுடன் 17.02.2024 அன்றும் ஆலோசனை கூட்டங்கள் நடத்தி இக்கூட்டங்களில் சிறுபான்மையினரது பல்வேறு கோரிக்கைகளை கேட்டறிந்து அவர்களின் பல்வேறு கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டன.

- கல்வி உதவித்தொகையினை, 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை அரசு, மற்றும் அரசு உதவி பெறும்

பள்ளிகளில் பயிலும் முஸ்லிம் மாணவியர்களுக்கு, தமிழ்நாடு அரசு நிதி உதவியுடன் வக்ஃப் வாரியம் மூலம் வழங்க ஆணை வெளியிடப்பட்டன.

- 2023-2024-ஆம் ஆண்டு முதல் கல்வி நிறுவனங்களுக்கு மதச்சார்பு சிறுபான்மையினர் அந்தஸ்துக்கான நிரந்தர சான்றிதழ்கள் வழங்க ஆணை வெளியிடப்பட்டன.
- கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள், இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டம் / கபர்ஸ்தான் அமைக்க ஆணை வெளியிடப்பட்டன.
- அரசு உதவி பெறும் சிறுபான்மையினர் பள்ளிகளுக்கும் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி திட்டம் மற்றும் புதுமைப்பெண் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.
- கிறித்தவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள்

நலவாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வதற்கான நிபந்தனைகள் தளர்வு செய்து ஆணை வெளியிடப்பட்டன.

- கிறித்துவர்கள் ஜெருசலேம் புனிதப் பயணம் செல்வதற்கு அரசு நிதியுதவி வழங்குவதற்கு திருத்தியமைக்கப்பட்ட வழிமுறைகளுடன் ஆணை வெளியிடப்பட்டன.

### 6. முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்

கர்நாடக நவாப் அவர்களால் "முகமதியன் கோஷா விதவை சாரிட்டி" என்ற பெயரில் ஆதரவற்ற முஸ்லிம் விதவைகளுக்கு மாதந்தோறும் உதவித்தொகை வழங்கி அவர்களுக்கு உதவும்பொருட்டு 1.10.1892-இல் ஒரு சங்கம் துவங்கப்பட்டது. பின்னர் இதன் பெயர் "முஸ்லிம் மகளிர் உதவும் சங்கம்" என்று மாற்றியமைக்கப்பட்டது. இச்சங்கம் 12.08.1976-இல் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டது. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை தலைவராகக் கொண்டு செயல்படுகிறது.

இதனை அடிப்படையாக கொண்டு மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் 2007 ஆம் ஆண்டில் முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் தொடங்கப்பட்டன. அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் உள்ளன. இத்துடன் மேலும் கூடுதலாக 5 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் தேனி, கிருஷ்ணகிரி, விழுப்புரம், கோயம்புத்தூர் மற்றும் திருச்சி ஆகிய மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. தற்போது 43 முஸ்லிம் மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள், சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கைவினைப் பொருள்கள் செய்வதற்கான பயிற்சிகள், தையல், பூ வேலைப்பாடுகள், காலணிகள் மற்றும் தேவைக்கேற்ப இதர

பயிற்சிகளும் கட்டணமின்றி வழங்கப்படுகிறது. இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம் ஆதரவற்ற, வயதான முஸ்லிம் விதவைகள் மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் முஸ்லிம் மகளிர் ஆகியோர்களுக்கு உதவிடும் வகையில் நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப அரசின் இணை மானியம் இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ. 658.99 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.413.11 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 7. கிறித்துவ மகளிர் உதவும் சங்கம்

முஸ்லீம் மகளிர் உதவும் சங்கங்கள் போன்று ஆதரவற்ற வயதான கிறித்துவ விதவைகளுக்கு உதவிடும் வகையில் மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அனைத்து 38 மாவட்டங்களிலும் தலா ஒரு கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதனுடன் கூடுதலாக 3 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் கரூர், மதுரை மற்றும் தேனி ஆகிய மாவட்டங்களில் 2022-2023 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டன. தற்போது 41 கிறித்துவ மகளிர் உதவும் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களுக்கு விதைத் தொகையாக தலா ரூ.1 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. இச்சங்கங்கள், சங்கங்கள் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இச்சங்கங்களின் நிதி ஆதாரங்களின் மூலம், பின்வரும் உதவிகள் வழங்கப்படுகிறது.

- ஆதாவற்ற கிறித்தவ விதவைகளுக்கு உதவி செய்தல் மற்றும் மாதாந்திர உதவித் தொகை வழங்குதல்.
- ஆதரவற்ற கிறித்தவ விதவைகளுக்கு கைவினைப் பொருட்கள் செய்ய பயிற்சி அளித்தல் மற்றும் சிறுதொழில் துவங்க உதவி புரிதல்.
- வியாபாரம் மற்றும் தொழில்துறையில் கிறித்தவ மகளிருக்கு உதவி செய்து அவர்களை முன்னேற்றமடைய செய்தல்.
- சுய உதவிக் குழுக்கள் அமைத்து பயிற்சி அளித்து தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகத்தின் (TAMCO) குறைந்த வட்டி விகிதத்தில் கடனுதவி வழங்கும் திட்டத்தின் மூலம் தேவையான பெண்களுக்கு சிறிய வியாபாரம் துவங்கக் கடனுதவி அளித்தல்.
- ஆதரவற்ற கிறித்தவ விதவைகளுக்கு மருத்துவ பரிசோதனை முகாம்கள் நடத்தி மருத்துவ உதவிகள் கிடைக்கச் செய்தல்

இச்சங்கங்கள் நன்கொடை மூலம் திரட்டும் நிதி ஆதாரத்திற்கேற்ப அரசின் இணை மானியம்

இரு மடங்காக 1 : 2 என்ற விகிதாச்சாரத்தில் ஒரு வருடத்திற்கு, ஒரு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகின்றது.

இச்சங்கங்களுக்கு 2023-2024 ஆம் ஆண்டில் அரசின் இணைமானியமாக ரூ.394.80 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.297.54 இலட்சம் இத்திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

இஸ்லாமியர்களின் பள்ளிவாசல்கள் மற்றும் மதரசாக்களில் பணிபுரியும் ஆலிம்கள், பேஷ் இமாம்கள், அரபி ஆசிரியர்கள்/ஆசிரியைகள், மோதினார்கள், பிலால்கள் மற்றும் இதர பணியாளர்கள் தர்காக்கள், அடக்கஸ்தலங்கள், தைக்காக்கள், ஆஷூர்கானாக்கள் மற்றும் முஸ்லீம் அனாதை இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் முஜாவர் உள்ளிட்ட பணியாளர்களை பொருளாதாரம் மற்றும் கல்வி

நிலைகளில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டு உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் 2009-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில் உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்தும் 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் ஈமச்சடங்கு உதவித்தொகை, கண் கண்ணாடி உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாரியம், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களை தலைவராக கொண்டு 10 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 15 அலுவல் சாரா உறுப்பினர்களுடன் 19.02.2024 முதல் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்<br>அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ. 1,25,000 |
| | ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.30,000 |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.5, 000 |

| | | |
|---|---|---|
| 4 | கல்வி உதவித்தொகை<br>அ) 6-ஆம் வகுப்பு முதல் 9-ஆம் வகுப்பு வரை படித்து வரும் மாணவ, மாணவியருக்கு | ரூ.1,000 |
| | ஆ) 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | இ) 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | ஈ) 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | உ) 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500 |
| | ஊ) 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| | எ) முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500 |
| | ஏ) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | ஐ) முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4,000 |
| | ஒ) மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.5,000 |
| | ஓ) தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.4,000 |
| | ஔ) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.6,000 |

| | | |
|---|---|---|
| | ஃ) தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | க) மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ங) ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,000 |
| | ச) மாணவர் இல்ல வசதியுடன் ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | திருமண உதவித்தொகை<br>அ) ஆண்கள்<br>ஆ) பெண்கள் | <br>ரூ.3,000<br>ரூ.5,000 |
| 6 | மகப்பேறு உதவித்தொகை<br>அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு) | ரூ.6,000 |
| | ஆ) கருச்சிதைவு / கருக் கலைப்பு | ரூ.3,000 |
| 7 | மூக்கு கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | ரூ.500 (அதிகபட்சம்) |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 |

2023-2024 ஆம் ஆண்டில் 544 நபர்கள் புதிய உறுப்பினர்களாக பதிவு செய்யப்பட்டு,

இவ்வாரியத்தில் இதுவரை மொத்தம் 14,696 நபர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இவ்வாரியத்தின் மூலம் 2023-2024 ஆம் ஆண்டில் 395 பயனாளிகளுக்கு ரூ.50.44 இலட்சம் செலவில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாரியத்தில் இதுவரையில் 5,027 பயனாளிகளுக்கு ரூ.246.20 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.78.76 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8.1 பதிவுபெற்ற வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இருசக்கர வாகனம் வாங்க மானியம்**

இத்திட்டத்தின் கீழ் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்ட வக்ஃப் நிறுவனங்களில் பணியாற்றும் உலமாக்களுக்கு இரு சக்கர வாகனம் வாங்க வாகனத்தின் விலையில் 50 விழுக்காடு அல்லது

ரூ.25,000 இதில் எது குறைவோ, அத்தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.703.50 இலட்சம் நிதி வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 98 நபர்களுக்கு ரூ.24.50 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் மறுசீரமைக்கப்படும்.

**9. கிராமப்புற சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

கிராமப்புற சிறுபான்மையின மாணவியருக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் 2022-2023-ஆம் ஆண்டில் புதிதாக இவ்வரசால் தொடங்கப்பட்டது. இத்திட்டம் சிறுபான்மையின கிராமப்புற பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிப்பதையும் தொடக்கக் கல்வி அளவில் இப்பெண் குழந்தைகளின் இடைநிற்றலைக் குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும். இத்திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக அரசு

உதவி பெறும் பள்ளிகளில் 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் மாணவிகளுக்கு ரூ.500 மற்றும் 6 ஆம் வகுப்பு பயிலும் மாணவியர்களுக்கு ரூ.1000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற பெற்றோர்/ பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1,00,000 ஆகும்.

இத்திட்டத்தின் கீழ் 2022-2023 மற்றும் 2023-2024 ஆகிய ஆண்டுகளுக்கு ரூ. 483.13 இலட்சம் செலவில் 76,723 மாணவியர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.275.60 இலட்சம் இத்திட்டத்திற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. சிறுபான்மையினருக்கு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் வழங்குதல்**

சிறுபான்மை வகுப்பை சார்ந்தவர்களின் பொருளாதார மேம்பாட்டினை கருத்திற்கொண்டு மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள்

வழங்கப்பட்டு வருகின்றன. 2023-24 ஆம் நிதியாண்டில் 2,500 மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரங்கள் ரூ.140.68 இலட்சம் செலவில் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டது.

## 11. ஜெருசலேம் புனித பயணத்திற்கான நிதியுதவி

கிறித்துவர்களின் புனித தலமான இஸ்ரேலில் உள்ள ஜெருசலேமிற்கு புனித பயணம் செல்வதற்கு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிறித்துவ பிரிவினருக்கும் அரசால் நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டொன்றுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்பெறும் பயனாளிகளின் எண்ணிக்கை 600 ஆகும். இவற்றில் 50 இடங்கள் கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. தற்போது கன்னியாஸ்திரிகள் / அருட்சகோதரிகளுக்கு ரூ.60,000-ம் இதர நபர்களுக்கு ரூ.37,000-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் இதுவரை

ரூ.825.60 இலட்சம் செலவில் 4,128 கிறித்துவர்கள் ஜெருசலேம் புனித பயணம் மேற்கொண்டுள்ளனர்.

மேலும், இத்திட்டத்தினை ஏற்கனவே உள்ள நடைமுறைகளுடன் ECS முறையில் பயனாளிகளுக்கு நேரடியாக மானியம் வழங்கும் திட்டமாக வழிகாட்டி நெறிமுறைகள் 2023-2024-ஆம் ஆண்டில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன.

2024-2025 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.233.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 12. கிறித்துவ தேவாலயங்கள் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதலுக்கான மானிய உதவி அளிக்கும் திட்டம்

கிறித்துவ தேவாலயங்களின் பராமரிப்பிற்கு உதவிடும் வகையில் தமிழகத்தில் உள்ள கிறித்துவ தேவாலயங்களில் புனரமைத்தல் மற்றும் பழுது நீக்குதல் பணிகளை மேற்கொள்ள மானிய உதவி அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ரூ.7 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கிறித்துவ தேவாலயங்கள் பழுதுபார்த்தல் மற்றும் புனரமைத்தலுக்கு மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளுடன் தேவாலயத்திற்கு சுற்றுச்சுவர், உபகரணங்கள், அறைகலன்கள் ஆகிய கூடுதல் பணிகள் / வசதிகள் மேற்கொள்ள அனுமதி அளித்தும் மேலும், இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் மானியத்தை ஒரு தேவாலயத்திற்கு ரூ.20 இலட்சம் வரை உயர்த்தி வழங்கியும் 2023-2024-ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டுள்ளது.

இதுவரை 34 கிறித்துவ தேவாலயங்களுக்கு புனரமைப்புப் பணிகளுக்காக ரூ.101.90 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

## 13. தொன்மையான தேவாலயங்கள் புனரமைத்தல் திட்டம்

தொன்மையான தேவாலயங்கள் புனரமைத்தல் திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டில் சென்னையில் உள்ள வெஸ்லி தேவாலயம், செங்கல்பட்டிலுள்ள புனித தோமையார் மலை தேவாலயம், கன்னியாகுமரியிலுள்ள புனித சவேரியர் தேவாலயம் மற்றும் திருநெல்வேலியில் உள்ள கால்டுவெல் நினைவகம் ஆகிய தேவாலயங்களுக்கு ரூ.6.00 கோடி ஒப்பளிக்கப்பட்டு முதல் தவணையாக ரூ.3.00 கோடி விடுவிக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

2023-2024 ஆம் ஆண்டிற்கு மதுரை புனித ஜார்ஜ் தேவாலயம் புனரமைப்பதற்காக இத்திட்டத்தின்கீழ் ரூ.2.00 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2024-25 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.10.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. கபர்ஸ்தான் மற்றும் கல்லறைத்தோட்டம் அமைத்தல்**

கிறித்தவர்களுக்கான கல்லறைத் தோட்டங்கள் மற்றும் இஸ்லாமியர்களுக்கான கபர்ஸ்தான்கள் இல்லாத மாவட்டத் தலைநகரங்களில், தேவைப்படும் நிலத்தை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் கையகப்படுத்தி, மாநகராட்சி / நகராட்சி சார்பில் கல்லறைத் தோட்டங்கள் மற்றும் கபர்ஸ்தான்கள் அமைக்க ஆணைகள் வெளியிடப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**15. கல்லறைத் தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்-களுக்கு புதிதாக சுற்றுச்சுவர், பாதை அமைத்தல் மற்றும் புனரமைத்தல்**

2023-2024-ஆம் ஆண்டில் கிறித்தவர் மற்றும் இஸ்லாமிய சமுதாயத்தினருக்கான கல்லறைத்தோட்டம் மற்றும் கபர்ஸ்தான்களில் உள்ள பழுதடைந்த சுற்றுச் சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச்சுவர், பாதை

அமைத்தல் மற்றும் பாதைகளை புனரமைத்தல் திட்டத்தினை செயல்படுத்த ரூ.1.00 கோடி நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் தற்போது புதுக்கோட்டை மாவட்டத்தில் 2 கபர்ஸ்தான்களுக்கு பழுதடைந்த சுற்றுச் சுவர்களை சீரமைத்தல், புதிதாக சுற்றுச்சுவர் மற்றும் பாதை அமைத்தல் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**16. கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம்**

2022-ஆம் ஆண்டில் கிறித்துவ தேவாலயங்களில் பணியாற்றும் உபதேசியார்கள், வேதியர்கள், உதவியாளர்கள், பாடகர்கள், கல்லறை பணியாளர்கள், கிறித்துவ அனாதை இல்லங்கள், தொழுநோயாளியர் மறுவாழ்வு இல்லங்கள் ஆகிய நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்கள் பொருளாதாரம் மற்றும் கல்வி

நிலைகளில் முன்னேற்றம் அடைவதற்காக கிறித்துவ தேவாலயங்களில் பணிபுரியும் உபதேசியார்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. இவ்வாரியத்தில், உறுப்பினராக பதிவு செய்ய 18 வயது நிறைவு செய்து 60 வயதுக்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு அமைப்புசாரா தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டுத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நல வாரியங்கள் மூலம் வழங்கப்பட்டு வரும் நல உதவித் திட்டங்கள் போன்று விபத்து நிவாரணம், கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மகப்பேறு உதவித்தொகை மற்றும் முதியோர் ஓய்வூதியம் ஆகிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்நல வாரியத்தில் திருமதி. விஜிலா சத்தியானந்த் தலைவர், திரு. போதகர் R. தயாநிதி

துணைத் தலைவர், 9 அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் மற்றும் 16 அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியோரை 3 ஆண்டு காலத்திற்கு நியமனம் செய்து 02.03.2024-இல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

**இவ்வாரியத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகள் விவரம்**

| வ. எண். | நிதி உதவிகள் விவரம் | உதவித்தொகை |
|---|---|---|
| 1 | விபத்து ஈட்டுறுதித் திட்டத்தின் கீழ்<br>அ) விபத்தினால் மரணம் ஏற்பட்டால் உதவித்தொகை | ரூ. 1,00,000 |
| | ஆ) விபத்தினால் ஊனம் ஏற்பட்டால் ஊனத்தின் தன்மைக்கேற்ப | ரூ.10,000 முதல் ரூ.1,00,000 வரை |
| 2 | இயற்கை மரணத்திற்கான உதவித்தொகை | ரூ.20,000 |
| 3 | ஈமச்சடங்கு செலவிற்கான உதவித் தொகை | ரூ.5, 000 |

| | | |
|---|---|---|
| 4 | கல்வி உதவித்தொகை<br>அ. 10 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | ஆ. 10 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்களுக்கு | ரூ.1,000 |
| | இ. 11 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,000 |
| | ஈ. 12 ஆம் வகுப்பு படித்து வரும் பெண் குழந்தைக்கு | ரூ.1,500 |
| | உ. 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றவருக்கு | ரூ.1,500 |
| | ஊ. முறையான பட்டப்படிப்பு | ரூ.1,500 |
| | மாணவர் இல்ல விடுதி வசதியுடன் முறையான பட்டப்படிப்பிற்கு | ரூ.1,750 |
| | எ. முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் முறையான பட்ட மேற்படிப்புக்கு | ரூ.5,000 |
| | ஏ. தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.4,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட படிப்பிற்கு | ரூ.6,000 |

| | | |
|---|---|---|
| | ஐ. தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.6,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பிற்கு | ரூ.8,000 |
| | ஓ. ஐ.டி.ஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,000 |
| | மாணவர் இல்ல வசதியுடன் ஐடிஐ அல்லது தொழிற் பயிற்சி படிப்பிற்கு | ரூ.1,200 |
| 5 | திருமண உதவித்தொகை<br>ஆண்கள்<br>பெண்கள் | <br>ரூ.3,000<br>ரூ.5,000 |
| 6 | மகப்பேறு உதவித்தொகை<br>அ) மகப்பேறு மாதம் ஒன்றுக்கு ரூ.1000 வீதம் (6 மாதங்களுக்கு) | ரூ.6,000 |
| | ஆ) கருச்சிதைவு / கருக் கலைப்பு | ரூ.3,000 |
| 7 | மூக்கு கண்ணாடி செலவுத்தொகையை ஈடு செய்தல் | ரூ.500 (அதிகபட்சம்) |
| 8 | முதியோர் ஓய்வூதியம் மாதந்தோறும் | ரூ.1,000 |

இவ்வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை

வழங்குவதற்கு முதற்கட்டமாக ரூ.75.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**17. மறுவாழ்வு நிதியுதவி வழங்குதல்**

கலவரங்களால் பாதிக்கப்பட்ட மற்றும் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்று சிறையிலிருந்து வெளிவரும் சிறுபான்மையின மக்களுக்கு மறுவாழ்வு அளித்து உதவிடும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், சிறுவணிகம் தொடங்குவதற்கு நபர் ஒருவருக்கு ரூ.10 ஆயிரம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை சிறு குற்றங்களுக்காக சிறை சென்று வெளிவந்த 14 நபர்களுக்கு ரூ.1.40 இலட்சம் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**18. பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம்**

பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டம் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களின் கீழ், நிர்ணயிக்கும் இலக்குகளில், சிறுபான்மையினரின் மக்கள் தொகைக்கு ஏற்ப,

உரிய பங்கு சிறுபான்மையின மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்திடும் வகையில், செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கல்வி கற்பதற்கான வசதிகளை வழங்குதல், கடனுதவி வழங்குதல், வீடுகளுக்கான வசதிகளை உருவாக்குதல், வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் மதநல்லிணக்கத்தை பேணுதல் ஆகியன இத்திட்டத்தின் முதன்மை குறிக்கோள்கள் ஆகும்.

வெவ்வேறு துறைகள் மூலம் செயல்படுத்தப்படும் பாரதப் பிரதமரின் புதிய 15 அம்ச திட்டத்தை கண்காணிக்கவும் மற்றும் மதிப்பாய்வு செய்யவும் மாநில அளவில் தலைமைச் செயலர் அவர்கள் தலைமையில் ஓர் உயர்நிலைக் குழுவும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் ஒரு குழுவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

## 18.1 பாரதப்பிரதமரின் புதிய 15 அம்ச திட்டங்கள்

| | |
|---|---|
| 1. | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் |
| 2. | பள்ளிகல்வியை பெறுவதற்கான வாய்ப்பு |
| 3. | உருது மொழியை கற்பிப்பதற்கான வசதி ஏற்படுத்தல் |
| 4. | மதரஸா கல்வி முறையை நவீனப்படுத்துதல் |
| 5. | சிறுபான்மையின சமுதாயத்தைச் சார்ந்த கல்வியில் சிறந்த மாணவ/ மாணவியருக்கு கல்வி உதவித் தொகை |
| 6. | மௌலானா ஆசாத் கல்வி அமைப்பின் மூலம் கல்விக் கூடங்களின் கட்டமைப்புகளை மேம்படுத்துவது |
| 7. | சுய வேலைவாய்ப்பு மற்றும் எளியவர்களுக்கான கூலியுடன் வேலைத் திட்டம் |
| 8. | தொழில் நுட்ப பயிற்சியின் மூலம் திறனை மேம்படுத்துதல் |
| 9. | பொருளாதார நடவடிக்கைகளுக்கான கடன் உதவி |
| 10 | மாநில மற்றும் மத்திய அரசுப்பணிகளில் வேலைவாய்ப்பு |

| | |
|---|---|
| 11. | ஊரக வீடு வசதி திட்டத்தில் சம அளவு பங்கு |
| 12. | சிறுபான்மையினத்தவர் வாழும் குடிசைப்பகுதிகளின் நிலையை மேம்படுத்தல் |
| 13. | இனக்கலவரங்களைத் தடுத்தல் |
| 14. | இனக்கலவரத்தினை தூண்டுவோர் மீது குற்ற விசாரணை நடத்துதல் மற்றும் |
| 15. | இனக்கலவரத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு மறுவாழ்வு வழங்குதல். |

**19. பிரதம மந்திரியின் சிறுபான்மையினருக்கான மக்கள் மேம்பாட்டு திட்டம் (பிரதம மந்திரி ஜன் விகாஸ் கார்யக்ரம்)**

பிரதம மந்திரியின் சிறுபான்மையின-ருக்கான மக்கள் மேம்பாட்டுத் திட்டம் (பிரதம மந்திரியின் ஜன் விகாஸ் கார்யக்ரம்), சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் உள்ள சிறுபான்மையினரின் சமூக மற்றும் பொருளாதார நிலையை உயர்த்துவதையும், அவர்களது வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் வகையில் அடிப்படை வசதிகளை

வழங்குவதையும், ஏற்ற தாழ்வினை குறைப்பதையும் நோக்கமாக கொண்டதாகும்.

இத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறைகளில் உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்கும் வகையில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. ஒன்றிய அரசின் சிறுபான்மையின நல அமைச்சகத்தால், 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி சிறுபான்மையினர் அதிகமாக வாழும் பகுதிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கான திருத்தப்பட்ட வழிகாட்டி நெறிமுறைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டமானது 15 கிலோமீட்டர் சுற்றளவில் 25% அதிகமாக சிறுபான்மையினர் அதிகம் வாழும் செறிவூட்டப்பட்ட பகுதிகளில் முன்மொழியப்படும்.

இத்திட்டம், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் 60:40 என்ற நிதி பங்களிப்புடன்

செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்படும் மொத்த நிதியில் 80 சதவீதம் கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு திட்டங்களுக்கும், அவற்றில் 33 - 40 சதவீதம் பெண்கள் / பெண் குழந்தைகளுக்கான கட்டமைப்புகள் / வசதிகள் ஏற்படுத்துவதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் சமுதாய கூடம் அமைத்தல், உண்டு உறைவிடப்பள்ளி, திறன்மிகு வகுப்பறை (Smart Class), அரசு தொழிற்பயிற்சி நிலையம்/தொழில்நுட்ப கூடங்களில் கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல், சுகாதார வசதிகள் ஏற்படுத்துதல், அரசு பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுதல், பல்வகை தொழில்நுட்ப கல்லூரிகள், வேலைக்கு செல்லும் பெண்களுக்கு விடுதிகள் அமைத்தல், ஒன்றிய மற்றும் மாநில அரசுகளின் பல்கலைக் கழகங்களில் மாணவர் விடுதிகள் மற்றும் சிறப்பு வகுப்புகள் உருவாக்குதல், அரசு அங்கீகரித்துள்ள மதராசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்

கூடிய கணினிகள் வழங்குதல் மற்றும் சிறுபான்மையினர் அதிகம் வாழும் பகுதிகளில் பல்வேறு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி தருதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(ரூ. இலட்சத்தில் )

| வருடம் | பணிகளின் எண்ணிக்கை | மொத்த மதிப்பீட்டு தொகை (ரூ) | முதற்கட்ட தவணை | | இரண்டாம் கட்ட தவணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | மத்திய அரசு பங்கு (ரூ) | மாநில அரசு பங்கு (ரூ) | மத்திய அரசு பங்கு* (ரூ) | மாநில அரசு பங்கு (ரூ) |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 2019-20 & 2020-21 | 61 | 4268.79 | 1280.634 | 853.756 | 1280.632 | 853.756 |
| 2021-22 | 62 | 61575.41 | 18422.223 | 12281.483 | 18523.016 | 12348.674 |
| மொத்தம் | 123 | 65844.20 | 19702.857 | 13135.239 | 19803.648 | 13202.430 |

*எதிர் நோக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2023-2024-ஆம் ஆண்டு 13 மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 280 திட்ட பணிகளை ரூ.674.58 கோடி மதிப்பீட்டில்

மேற்கொள்ள ஒப்புதல் கோரி கருத்துரு ஒன்றிய அரசின் சிறுபான்மையினர் நல அமைச்சகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.7,717.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 20. சிறுபான்மையின கல்வி நிறுவனங்களுக்கான சிறுபான்மையினர் அந்தஸ்து

2023-ஆம் ஆண்டிலிருந்து கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மையினர் அந்தஸ்து வழங்கும் பொருண்மையினை இத்துறையின் மூலம் செயல்படுத்த ஆணையிடப்பட்டது. இணையவழி மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்த தனி இணையதளம் https://minoritystatus.tn.gov.in உருவாக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளது. சிறுபான்மையினர் அந்தஸ்து கோரும் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கு சிறுபான்மையினர் நல இயக்குநரகம் முனையக துறையாகும் (Nodal Department). கல்வி நிறுவனங்களுக்கு மதச்சார்பு

சிறுபான்மையின அந்தஸ்து (Religious Minority Status) காலம் குறிப்பிடாமல் நிரந்தரச் சான்றிதழாக வழங்க 02.02.2024-இல் அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. 2023-24 ஆம் ஆண்டில் மொத்தம் 44 கல்வி நிறுவனங்களுக்கு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் மொழிவாரி சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் 26 கல்வி நிறுவனங்களுக்கும் மதச்சார்பு சிறுபான்மை அந்தஸ்து சான்றிதழ்கள் 18 கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

**21. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம்**

தமிழ்நாட்டில் வாழும் மதவழி மற்றும் மொழிவழி சிறுபான்மையினரின் உரிமைகளையும், நலன்களையும் பாதுகாக்கும் பொருட்டு தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் 1989 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணைய

சட்டம் 2010இன்படி இவ்வாணையம் சட்டபூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாக 01.08.2010 முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாணையம் அவ்வப்போது திருத்தியமைக்கப்பட்டு தற்போதைய ஆணையம் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை தலைவராகவும் 8 உறுப்பினர்களுடன் 28.06.2021 முதல் 3 ஆண்டு காலத்திற்கு திருத்தி அமைக்கப்பட்டது மற்றும் 12.01.2023 முதல் திரு.எம்.எம். அப்துல் குத்தூஸ் அவர்கள் துணைத் தலைவராக உள்ளார்.

இந்த ஆணையம் சிறுபான்மையினத்தவரை பாதுகாத்திட இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் மாநில அரசால் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டங்களின் மூலம் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்புகள் செயல்படும் விதத்தை ஆய்வு செய்தல், கண்காணித்தல், சிறுபான்மையினர் தொடர்பாக அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் சட்டம் மற்றும் நலத்திட்டங்கள் குறித்து உரிய

கருத்துக்களைத் தெரிவித்தல், மாநிலத்தில் மதநல்லிணக்கத்தை உறுதிப்படுத்தல், பராமரித்தல் மற்றும் மேம்படுத்துதலுக்கான வழிவகைகளை அரசுக்குப் பரிந்துரைத்துதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்கிறது.

## 22. தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் 31.08.1999 அன்று இந்திய கம்பெனிகள் சட்டம் 1956-ன்கீழ் சிறுபான்மையினரான இஸ்லாமியர்கள், கிறித்தவர்கள், சீக்கியர்கள், புத்தமதத்தவர்கள், பார்சிகள் மற்றும் ஜெயின் ஆகியோர்கள் நலனுக்காக அமைக்கப்பட்டது, அவர்கள் சிறுவணிகம்/ வியாபாரம் மேற்கொள்ள குறைந்த வட்டி விகிதத்தில் கடன் வழங்கி வருகிறது. இந்நிறுவனம், தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்தின் மாநில முகமையாக செயல்பட்டு வருகிறது, சிறுபான்மையின

மக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்நிறுவனம் தனி நபர் காலக்கடன், விரசாத்கடன், சிறுகடன் மற்றும் கல்விக்கடன் ஆகிய கடன் உதவிகளை வழங்கி வருகிறது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.5 கோடியாகும், இதில் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.2.05 கோடியாகும். இக்கழகம் வழங்கும் பல்வேறு கடன் திட்டங்களுக்கான நிதியை, மாநில அரசின் பொறுப்புறுதியின் மீது தேசிய சிறுபான்மையின வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடனாகப் பெற்று வழங்குகிறது. தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி ஓராண்டு காலத்திற்கு வழங்கப்பட்டது. 2022-2023 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசின் பொறுப்புறுதி 3 ஆண்டு காலத்திற்கு (2022-2023 லிருந்து 2024-2025 வரை) வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது. இதன் மூலம் தேசிய சிறுபான்மையினர் வளர்ச்சி மற்றும் நிதிக்கழகத்திடமிருந்து கடன்களை உரிய

நேரத்தில் பெற இயலும். பல்வேறு திட்டங்களின் கீழ் நல்ல முன்னேற்றம் ஏற்பட இதன் மூலம் வழிவகை ஏற்படும்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி/ கூட்டுறவு நகர வங்கி/ தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் பயனாளிகளுக்கு கடன் வழங்கி வருகிறது.

தனிநபர் காலக்கடன், விரசாத்கடன் (கைவினை கலைஞர் கடன்), சுய உதவி குழுக்களுக்கு வழங்கும் சிறு கடன் மற்றும் கல்விக்கடன் ஆகிய கடன்களில் பங்குத் தொகை விவரம் பின்வருமாறு:

தேசியகழகத்தின் பங்கு - 90 %<br>
டாம்கோவின் பங்கு - 5 %<br>
பயனடைவோரின் பங்கு - 5 %

2023-2024ஆம் ஆண்டில் இக்கழகத்தின் மூலம் முதன்முறையாக 10,201 பயனாளிகளுக்கு ரூ.6858.21 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**22.1 தனிநபர் காலக்கடன் திட்டம்.**

சுயவேலைவாய்ப்புகள் உருவாக்குவதை ஊக்கப்படுத்தும் நோக்கில் தமிழ்நாடு மேம்பாட்டுக்கழகம் மூலம் பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள சிறுபான்மையின மக்கள் சுயமாக தொழில் / வியாபாரம் செய்ய தனிநபர் காலக்கடன்கள் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| **வ. எண்** | **கடன் தொகை** | **வட்டி விகிதம் (ஆண்டிற்கு)** | **ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.20 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | 6% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II ரூ.30 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 8%<br>பெண் - 6% | திட்டம் –I இன்கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புறபகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024ஆம் ஆண்டில் 3606 பயனாளிகள் பயனடையும்

வகையில் ரூ.2491.89 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 22.2. விராசாத் –கைவினை கலைஞர் கடன்திட்டம்

விராசாத் – கைவினை கலைஞர் கடன் திட்டம், தனிநபர் காலக்கடன் திட்டத்தின் கீழ் கைவினை கலைஞர்களுக்கு மூலதன பொருட்களான உபகரணங்கள்/ கருவிகள் இயந்திரங்கள் வாங்குவதற்கு குறைந்தவட்டி விகிதித்தில் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டம் குறித்த விவரங்கள் பின்வருமாறு :

| **வ.எண்** | **கடன்தொகை** | **வட்டிவிகிதம் (ஆண்டிற்கு)** | **ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| 1 | திட்டம் I<br>ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 5%<br>பெண் - 4% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II<br>ரூ.10 இலட்சம் வரையிலான கடன்களுக்கு | ஆண் - 6%<br>பெண் - 5% | திட்டம் –I இன் கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் |

| | | | |
|---|---|---|---|
| | | | (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின்கீழ் 2023-2024-ஆம் ஆண்டில் 19 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.17.15 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**22.3 சுய உதவிக்குழுக்களுக்கான சிறுகடன் திட்டம்.**

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக்கழகத்தின் மூலம், சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் ஆண் மற்றும் பெண் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் பலகாரக்கடை, காலணி விற்பனை செய்தல், சிற்றுண்டி, ஜவுளி வியாபாரம், ஊறுகாய் மற்றும் அப்பளம் தயாரித்து விற்பனை செய்தல், கூடை பின்னுதல். தையல் கடை, காய்கறி கடை போன்ற சிறுவியாபாரம் செய்து தங்களின் பொருளாதாரத்தினை உயர்த்திட சிறுகடன் வழங்கும் திட்டம் மூலம் பின்வருமாறு கடன் வழங்கப்படுகிறது.

| வ. எண் | கடன்தொகை | வட்டிவிகிதம் (ஆண்டிற்கு) | ஆண்டு வருமானம் உச்சவரம்பு |
|---|---|---|---|
| 1 | திட்டம் I ரூ.1 இலட்சம் வரை (சுயஉதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு) | 7% | கிராமப்புறங்களுக்கு ரூ.98,000 நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |
| 2 | திட்டம் II ரூ.1.50 இலட்சம் வரை (சுயஉதவிக் குழு உறுப்பினர் ஒருவருக்கு) | ஆண் - 10% பெண் - 8% | திட்டம்-I-இன்கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புறபகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024ஆம் ஆண்டில் சுய உதவிக்குழுக்கள் மூலம் 6570 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.4343.26 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**22.4 கல்விக்கடன்.**

அரசு/ அரசால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் கல்வி நிறுவனங்களில் தொழிற்கல்வி மற்றும் வேலைவாய்ப்பு பட்டப்படிப்புகள் பயிலும்

சிறுபான்மையின மாணவ / மாணவியருக்கு பின்வருமாறு கல்விக்கடன் வழங்கப்படுகின்றன.

| **வ. எண்** | **கல்விக்கடன் தொகை** | **வட்டிவிகிதம் (ஆண்டிற்கு)** | **பெற்றோரது ஆண்டு வருமானம் உச்சவரம்பு** |
|---|---|---|---|
| 1 | <u>திட்டம் I</u><br>இந்தியாவில் கல்வி பயில கல்விக்கடன் ஆண்டுதோறும் ரூ.4 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப்படுகிறது.<br><br>மேலும், வெளிநாடுகளில் "தொழிற்கல்வி பயில ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | 3% | கிராமப்புறங்களுக்கு ரூ98,000<br>நகர்ப்புறங்களுக்கு ரூ.1.20 இலட்சம் |

| | | | |
|---|---|---|---|
| 2 | <u>திட்டம்-II</u> இந்தியாவில் கல்வி பயில ஆண்டுதோறும் ரூ4 இலட்சம் வீதம் அதிக பட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.20 இலட்சம் வரை வழங்கப் படுகிறது. மேலும், வெளிநாடுகளில் கல்வி பயில்பவர்களுக்கு ஒரு கல்வி ஆண்டிற்கு ரூ.6 இலட்சம் வீதம் அதிகபட்சமாக 5 ஆண்டுகளுக்கு ரூ.30 இலட்சம் வரை வழங்கப்படுகிறது. | மாணவர்க்கு – 8%<br><br>மாணவியர்க்கு – 5% | திட்டம் I இன்கீழ் நன்மைகளைப் பெறமுடியாத நபர்கள் மற்றும் ரூ.8 இலட்சம் வரை ஆண்டு வருமானம் கொண்டவர்கள் (கிராமப்புற மற்றும் நகர்ப்புற பகுதிகளுக்கு) |

இத்திட்டத்தின் கீழ் 2023-2024 ஆம் ஆண்டில் 6 மாணவ, மாணவியருக்கு ரூ.5.91 இலட்சம் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

## 23. தமிழ்நாடு மொழி வழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் (டால்மெட்கோ)

மொழி வழி சிறுபான்மையினர் பல்வேறு திட்டங்களில் பயனடையவும் தங்கள் நலனை வளர்த்தெடுத்து சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றம் அடையவும் ஏதுவாக தமிழ்நாடு மொழி வழி சிறுபான்மையினர் சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் 2021-ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இக்கழகத்திற்கு ரூ.1,609.20 இலட்சம் நிதி அனுமதிக்கப்பட்டுள்ளது.

## 24. தமிழ்நாடு வக்ஃப் வாரியம்

வக்ஃப் சட்டம், 1954 தமிழகத்தில் 15.01.1955 முதல் அமல்படுத்தப்பட்டது. இதனையடுத்து தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 18.01.1958ல் அமைக்கப்பட்டது. 1995-ம் ஆண்டு வக்ஃப் சட்டம் (மத்திய சட்டம் 43/1995) ன்படி 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை வாரியத்தை தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது. 2020-இல் அமைக்கப்பட்டு தற்போது

வாரியம் 11 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு திரு.எம்.அப்துல் ரஹ்மான் அவர்கள் இவ்வாரியத்தின் தலைவராக, வாரிய உறுப்பினர்களால் 22.07.2021 அன்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தமிழ்நாடு வக்ஃப் வாரியம் சென்னையைத் தலைமை அலுவலகமாகக் கொண்டு 11 மண்டல அலுவலகங்களுடன் செயல்பட்டு வருகிறது.

**24.1. குறிக்கோள் மற்றும் பணிகள்**

தமிழ்நாடு வக்ஃப் வாரியம் வக்ஃப் சட்டம், 1995-இன் கீழ் வக்ஃப் சொத்துக்களை பாதுகாத்து அபிவிருத்தி செய்வது, மேலும் வக்ஃப் நிறுவனங்களின் செயல்பாடுகளை கண்காணித்து அவற்றின் நிர்வாகங்களை நெறிப்படுத்துவது ஆகியவற்றை குறிக்கோளாக கொண்டு செயல்படுகிறது.

1. ஒவ்வொரு வக்ஃபின் தோற்றம், வருவாய், நோக்கம் பயனாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் அடங்கிய பதிவு (ஆவணங்கள்) பேணுதல்.

2. வக்ஃப் சொத்துக்களும் அதன் வருமானமும் எந்த நோக்கத்திற்காக வக்ஃப் உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காக செயல்படுத்தப் படுகிறதா என்று உறுதி செய்தல்.
3. வக்ஃப் நிர்வாகத்திற்காக அவ்வப்பொழுது அரசு வழங்கும் ஆணைகளை பின்பற்றுதல் மற்றும் கட்டளையிடுதல்.
4. வக்ஃப்களின் நிர்வாகத்திற்காக புதிய திட்டம் தீட்டிக்கொடுத்தல்.
5. வக்ஃப்களின் கணக்கை தணிக்கை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் மற்றும் முத்தவல்லிகள் சமர்ப்பிக்கும் பட்ஜெட்டை ஆய்வு செய்தல்.
6. வக்ஃப் சட்டப்படி முத்தவல்லிகளை நியமனம் செய்தல் மற்றும் நீக்குதல்.
7. இழந்த வக்ஃப் சொத்துக்களை மீட்க நடவடிக்கை எடுத்தல்.
8. வக்ஃப் மற்றும் வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை நடத்துதல்.
9. வக்ஃப் நிதியை நிர்வகித்தல்.

10. வக்ஃப் சொத்துக்கள் சம்பந்தமாக வாரியத்திற்கு அவ்வப்போது தேவைப்படும் தகவல்களை முத்தவல்லிகளிடம் கேட்டல்.
11. வக்ஃப் சொத்துக்கள், கணக்கு ஆவணங்கள், வக்ஃப் நாமாக்கள் மற்றும் பத்திரங்களை ஆய்வு செய்தல்.
12. வக்ஃப் சொத்தின் தன்மை பரப்பளவு ஆகியவற்றை ஆராய்ந்து முடிவு செய்தல் மற்றும் தேவைப்படும் போது வக்ஃப் சொத்துக்களை அளவை செய்தல்.
13. வக்ஃப்களைக் கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றிற்கு தேவைப்படும் எல்லா நடவடிக்கைகளிலும் ஈடுபடுதல்.

இவை நீங்கலாக அரசு வழங்கும் மானியத் தொகை மூலம் நலிவுற்ற வக்ஃப் நிறுவனங்களை பெரிய அளவிலான பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் பணிகளை மேற்கொள்ள பள்ளிவாசல் மற்றும் தர்காக்களுக்கு நிதி வழங்குதல்,

உலமாக்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல், ஓய்வூதியம் பெறும் உலமா இறப்பின் அவர்களின் நேரடி வாரிசுகளுக்கு உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்குதல், மற்றும் விவாகரத்து செய்யப்பட்ட முஸ்லிம் பெண்களுக்கு வாழ்க்கைச் செலவுத் தொகை வழங்குதல், காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல் போன்ற பணிகளில் வாரியம் ஈடுபட்டு வருகிறது. வாரியத்தின் மேற்பார்வையில் மதுரையில் எம்.எஸ்.எஸ் வக்ஃப் வாரிய கல்லூரி இயங்கி வருகிறது.

**24.2. வக்ஃப் நிறுவனங்கள் பதிவு**

தமிழ்நாடு வக்ஃப் வாரிய ஆளுகையின் கீழ் 6642 வக்ஃப்கள் உள்ளன. அதில் வக்ஃப் வாரியத்தில் பதிவு செய்யப்பட்டவை 3229 வக்ஃப்கள் பதிவு செய்யப்படாதவை 3413 வக்ஃப்கள் ஆகும். 2023-2024 ஆம் ஆண்டில் 74 வக்ஃப்கள் புதிதாக பதிவு செய்யப்பட்டன.

### 24.3. வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்தல்

வக்ஃப் சட்டம் 1995 பிரிவு 4 ன் கீழ் வக்ஃப் சொத்துக்களை நில அளவை செய்வதற்காக இயக்குநர், நில அளவை துறை, மாநில வக்ஃப் நில அளவை ஆணையராக அரசு நியமனம் செய்துள்ளது. மாவட்ட வருவாய் அலுவலர்கள் கூடுதல் வக்ஃப் நில அளவை ஆணையராக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். வட்டாட்சியர்கள் உதவி வக்ஃப் நில அளவை ஆணையர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

மாவட்ட வாரியாக வக்ஃப் சொத்துக்களின் விவரங்கள், 1954ம் ஆண்டு வக்ஃப் சட்டப் பிரிவு 4-இன்படி தயாரிக்கப்பட்ட மூல அறிக்கையில் இருந்து எடுக்கப்பட்டு தமிழ் நாட்டின் அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது. வாரியம் அளித்த வக்ஃப் சொத்துக்களின் விவரங்களின்படி நில அளவை கணக்கெடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு, நில விபரங்கள் நில அளவை இயக்குநர்

அவர்களிடமிருந்து பெறப்பட்டு மாவட்ட வாரியாக இந்த நில அளவை விபரங்கள் வக்ஃப் வாரிய நில ஆவண பதிவுகளுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட்டு வருகிறது.

மாநிலம் முழுவதுமுள்ள வக்ஃப் வாரிய நிலங்களை நவீன நில அளவை கருவிகள் மூலம் நில அளவை செய்வதற்காக தேவையான DGPS Rover கருவிகளை வழங்குமாறு நில அளவை மற்றும் நில வரித்திட்ட இயக்குநரிடம் கோரப்பட்டு DGPS Rover கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும் நில அளவைப் பணிகள் மேற்கொள்ள 30 உரிமம் பெற்ற நில அளவர்கள் பட்டியலும் பெறப்பட்டு வாரியத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

**24.4. வக்ஃப் சொத்துக்களின் பாதுகாப்பு**

தமிழநாட்டில் 6642 வக்ஃப் நிறுவனங்கள் உள்ளன. இவ்வக்ஃப் நிறுவனங்களுக்கு 63322 சொத்துக்கள் உள்ளன. இவற்றில் சில சொத்துக்கள் ஆக்கிரமிப்பிலும் சட்ட விரோதமாக

பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் சில வக்ஃப் சொத்துக்கள் வக்ஃப் நிறுவனங்களின் கீழ் இருந்தாலும் அத்தகைய சொத்துகளுக்கான பட்டா மூன்றாம் தரப்பினரின் பெயரிலும் உள்ளது. அவற்றை வக்ஃப் நிறுவனங்கள் பெயரில் பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக பரிவர்த்தனை மேற்கொள்ளப்படாமல் பாதுகாக்கவும், இவற்றையெல்லாம் சம்பந்தப்பட்ட வக்ஃப் நிறுவனங்களின் பெயரில் சட்டபூர்வமாக மீட்டெடுக்கவும், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், ஒருங்கிணைந்த வக்ஃப் மேலாண்மை திட்டம் (IWMS) என்ற வலைதளத்தை தேசிய தகவல் மையத்தின் (NIC) உதவியுடன் உருவாக்கி, அதன் மூலம் தமிழ் நிலம் மென்பொருளில் வக்ஃப் வாரிய நில விவரங்களை பதிவேற்றம் செய்து சரிபார்க்கப்பட்டு வருகின்றன.

மேலும், வக்ஃப் சொத்துக்களில் எந்தவிதமான சட்ட விரோதமான பரிவர்த்தனை ஏற்படாமல் பாதுகாப்பதற்கு வக்ஃப் சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பினை பூஜ்யமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2023-2024-ஆம் ஆண்டில் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு வக்ஃப் சொத்துக்களை அளவை செய்வதற்காகவும் (Survey) 11 மண்டல அலுவலகங்களில் 11 கணினிகள் மற்றும் 11 ஸ்கேனர்களுடன் கூடிய நகல் எடுக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கு ரூ.1.25 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**24.5 வக்ஃப் தீர்ப்பாயம் அமைத்தல்**

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 83 ன்படி, வக்ஃப் அல்லது வக்ஃப் சொத்துக்கள் தொடர்பாக எழும் அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காண்பதற்காக, தமிழ்நாடு அரசு 2018 ஆம் ஆண்டு சென்னையில் தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தை அமைத்தது. இத்தீர்ப்பாயம், மாவட்ட நீதிபதியை

தலைவராகவும், கூடுதல் மாவட்ட குற்றவியல் நடுவருக்கு இணையான மாநில குடிமை பணி அலுவலர் நிலையில் ஒரு உறுப்பினரையும், முஸ்லிம் சட்டம் மற்றும் நீதித்துறை பற்றிய அறிவைக் கொண்ட ஒருவரை மற்றொரு உறுப்பினராகவும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயத்தின் வழக்குகள் விபரம்:-

| 31.03.2023 வரை நிலுவையிலிருந்த வழக்குகள் | 2023-2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் | மொத்தம் | 2023-2024 ல் தீர்ப்பளிக்கப் பட்டவை | 31.03.2024 வரை நிலுவையில் உள்ள வழக்குகள் |
|---|---|---|---|---|
| 1690 | 854 | 2544 | 1204 | 1340 |

## 24.6 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வக்ஃப்கள்

வக்ஃப் சட்டம், 1995 இன் பிரிவு 65 ன்படி நிர்வாக முறைகேடு மற்றும் இதர நிர்வாகக்

காரணங்களுக்காகவும் சில வக்ஃப்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் எடுக்கப்பட்டு இதனை நிர்வகிக்க நிர்வாக அலுவலர்கள் வாரியத்தால் நியமிக்கப்படுகிறார்கள். தற்போது, 48 வக்ஃப் நிறுவனங்கள் தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளன, மேலும் இந்த வக்ஃப் நிறுவனங்களிடமிருந்து வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 45(7)ன் கீழ் நிர்வாகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது.

## 24.7 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் வக்ஃப் சொத்துக்களை ஆக்கிரமிப்பிலிருந்து மீட்டெடுக்கும் நடவடிக்கைகள்

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 54-இன் கீழ் வக்ஃப் சொத்துக்களை மீட்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் தனி நபர்கள் வக்ஃப் சொத்துக்களை சட்ட விரோதமாக விற்பனை மற்றும் பரிவர்த்தனை செய்வதை தடுத்திட தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் சம்பந்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு

பதிவு சட்டம், 1908 பிரிவு 22(A)-ன்படி ஆட்சேபணை கடிதங்கள் வழங்கப்பட்டு வக்ஃப் சொத்துகக்ள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

## 24.8 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு அளிக்கப்படும் நிர்வாக மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.2.5 கோடியை மாநில அரசு நிர்வாக மானியமாக வழங்குகிறது. தமிழ்நாடு வக்ஃப் வாரியம் 2022-2023 ஆம் ஆண்டு முதல் வக்ஃப்களிலிருந்து வசூலித்த சகாயத்தொகையின் அடிப்படையில் 5% ஊக்கத் தொகையை கூடுதல் மானியமாக வழங்குவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டு 2023-2024 ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.2,63,52,987 வழங்கப்பட்டுள்ளது.

## 24.9 தமிழ்நாடு வக்ஃப் வாரிய சரக அலுவலங்களின் கட்டுமான மானியம்

தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தின் பூந்தமல்லி, வேலூர், கடலூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை,

இராமநாதபுரம் மற்றும் சேலம் ஆகிய 8 சரக அலுவலக கட்டடம் கட்டுவதற்கு தலா ரூ.16 இலட்ச மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதன் முதற்கட்டமாக பூந்தமல்லி, வேலூர், இராமநாதபுரம் மற்றும் கடலூர் ஆகிய 4 சரக அலுவலகங்கள் கட்டுமான பணிகள் மேற்கொள்ள ரூ.64 இலட்சங்கள் வழங்கப்பட்டது. இவற்றில் கடலூர், வேலூர், இராமநாதபுரம் ஆகிய சரக அலுவலக கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது, இதர அலுவலக கட்டுமான பணிகள் நடைபெற்று வருகிறது.

## 24.10 மணவிலக்கு பெற்ற முஸ்லிம் பெண்களுக்கு பராமரிப்பு தொகை வழங்குதல்.

வக்ஃப் சட்டம், 1995 பிரிவு 77(4)(g)-ன்படி முஸ்லிம் பெண்கள் (மணவிலக்கு மீதான உரிமைகள் பாதுகாப்பு) சட்டம் 1986 ன்படி, நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் மணவிலக்கு

பெற்ற 5 முஸ்லிம் பெண்களுக்கு தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் பராமரிப்பு செலவுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இவ்வகைக்கு 2023-2024-ஆம் ஆண்டில் வாரிய நிதியிலிருந்து ரூ.1,09,200 செலவிடப்பட்டது.

## 24.11 தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் அரசின் உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 24.11.1. உலமா ஓய்வூதிய திட்டம்

உலமா ஓய்வூதியத் திட்டம், 1981 ஆம் ஆண்டு முதல் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் ஏழை பேஷ் இமாம்கள், மோதினார்கள், அரபி ஆசிரியர்கள், மற்றும் தர்காக்களில் பணியாற்றி ஓய்வு பெற்ற முஜாவர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 60 வயது நிரம்பிய மற்றும் 20 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கும், மாற்றுத்திறனாளியாக இருப்பின் 40 வயது நிரம்பிய

மற்றும் 10 ஆண்டுகள் பணி முடித்தவர்களும் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்கள் ஆவர்.

மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரின் தலைமையில் உள்ள உலமா ஒப்பளிப்புக்குழு உலமா ஓய்வூதியம் வழங்குவதற்கான அனுமதி வழங்குகிறது. உலமா ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு தற்போது உலமா ஓய்வூதியம் தலா மாதம் ரூ.3,000 வீதம் தற்பொழுது 1461 உலமாக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

2024-2025-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.540 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 24.11.2 உலமா குடும்ப ஓய்வூதிய திட்டம்

இவ்வரசால், உலமா ஓய்வூதியதாரர் இறப்பின் அவரது வாரிசுதாருக்கு உலமா

ஓய்வூதியதாரர் கடைசியாக பெற்ற உலமா ஓய்வூதியத்தில் 50% தொகையினை உலமா குடும்ப ஓய்வூதியமாக அளிக்கப்படுகிறது. தற்போது வரை 19 உலமா குடும்ப ஓய்வூதியம் வழங்கிட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

### 24.11.3 பெரு மராமத்து மற்றும் பழுதுபார்ப்பு மானியம்

மசூதிகள், தர்காக்கள் மற்றும் இதர வக்ஃப் நிறுவனங்களில் பெரிய அளவிலான பழுதுபார்ப்பதற்கும் மற்றும் புனரமைப்பதற்கும் அரசு மானியம் வழங்குகிறது. இம்மானியம் 2023-2024 ஆண்டு ரூ.10 கோடியாக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 2023-2024-ஆம் ஆண்டில் 134 வக்ஃப் நிறுவனங்கள் பயனடைந்துள்ளன. மேலும், 2024-2025 ஆம் ஆண்டிற்கு ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

### 24.11.4. தொகுப்பு நிதி – வக்ஃப் நிறுவனங்களில் பழுதுபார்ப்பு மற்றும் சீரமைப்பதற்கு

மசூதிகள் மற்றும் தர்காக்கள் போன்ற வக்ஃப் நிறுவனங்களில் பழுது மற்றும் சீரமைப்பு பணிகளை மேற்கொள்வதற்காக ரூ.3 கோடியில் தொகுப்பு நிதி (Corpus Fund) உருவாக்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மூலமாக பெறப்படும் வருவாயிலிருந்து தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் தேவைப்படும் வக்ஃப் நிறுவனங்களுக்கு சிறிய பழுது பார்ப்பு பணிகளுக்காக நிதி வழங்கப்படும்.

### 24.11.5. காஜிகளுக்கு மதிப்பூதியம் வழங்குதல்

தமிழ் நாட்டில் பணிபுரியும் மாவட்ட காஜிகளுக்கு மாதம் ரூ.20,000 மதிப்பூதியம் வழங்க தமிழ் நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. 2023-2024 ஆம் ஆண்டிற்கு ரூ.67.84 லட்சம் மதிப்பூதியமாக காஜிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

2024-2025-ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ.76.80 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 24.12. தமிழ்நாடு வக்ஃப் வாரியத்தால் மத்திய வக்ஃப் கழக உதவியுடன் மேற்கொள்ளப்படும் திட்டங்கள்

### 24.12.1 சஹாரி வக்ஃப் சம்பத்தி விகாஸ் யோஜனா

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்வதற்காக மத்திய வக்ஃப் கழகத்தால் கடன் வழங்கப்படுகிறது.

- வக்ஃப் நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் திட்டங்களின் அடிப்படையில் அபிவிருத்தி மேற்கொள்ளும் இடமானது எவ்வித வில்லங்கமும் இல்லாதிருத்தல் வேண்டும்.
- இத்திட்டத்தின் கீழ் அதிகபட்சமாக ரூ.2 கோடி அல்லது திட்ட மதிப்பீட்டில் 75% எது குறைவானதோ அத்தொகை கடனாக வழங்கப்படுகிறது.

- இத்திட்டத்திற்காக வழங்கப்படும் கடன் தொகையில் 8% நிர்வாக செயலாக்க கட்டணமாக வசூலிக்கப்படும்.

## 24.12.2 தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் (NAWADCO)

வக்ஃப் சொத்துக்களை அபிவிருத்தி செய்ய தேசிய சிறுபான்மை நல அமைச்சகத்தால் மத்திய வக்ஃப் கழகத்துடன் இணைந்து தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி தேசிய வக்ஃப் மேம்பாட்டு நிறுவனம் தகுதியான வக்ஃப் சொத்துக்களை வணிக ரீதியான மேம்பாட்டிற்கு தனது நிதியின் மூலம் அபிவிருத்தி மேற்கொண்டு அதன் மூலம் பெறப்படும் வருவாயினை வக்ஃப் நிறுவனத்துடன் மேற்கொள்ளப்படும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் விகிதாச்சார அடிப்படையில் குறிப்பிட்ட கால அளவு வரை பிரித்து கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 25. தமிழ்நாடு மாநில ஹஜ் குழு

### 25.1. ஹஜ் குழுவின் அமைப்பு:

இந்திய ஹஜ் குழு மும்பை மற்றும் வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஆகியவற்றின் வழிகாட்டுதலுடன் ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கும் மற்றும் ஹஜ் பயணிகளின் நலன் குறித்த பணிகளை மேற்கொள்வதற்கும் ஹஜ் குழு சட்டம், 2002 (மத்திய சட்டம் எண்.35/2002)-ன் படி மூன்று ஆண்டு காலத்திற்கு தமிழ்நாடு மாநில ஹஜ் குழு, மாநில அரசால் அமைக்கப்படுகிறது. தற்போதுள்ள குழு, 2023 ஆம் ஆண்டு 16 உறுப்பினர்களை கொண்டு அரசால் திருத்தியமைக்கப்பட்டது. திரு.ப.அப்துல் சமது, சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவின் தலைவராக, குழுவின் உறுப்பினர்களால் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

**25.2. மாநில ஹஜ் குழுவின் பணிகள்:**

1. தற்போதுள்ள ஒன்றிய சிறுபான்மை விவகாரத்துறை அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, இந்திய ஹஜ் குழுவானது 100% நிகழ்நிலை (online) மூலம் ஹஜ் விண்ணப்பங்களை விருப்பமுள்ள பயணிகளிடமிருந்து வரவேற்றல்.

2. ஒதுக்கீட்டிற்கு மேல் விண்ணப்பங்களின் எண்ணிக்கை அதிகமாக பெறப்பட்டால், மனுதாரர்களை கணினி மென்பொருளைப் பயன்படுத்தி குலுக்கல் முறையில் தேர்வு செய்தல்.

3. இந்திய ஹஜ் குழு, மும்பைக்கு செலுத்தவேண்டிய பயணக் கட்டணங்கள் மற்றும் இதர கட்டணங்கள் குறித்து உரிய அறிவுரைகளை விண்ணப்பதாரர்களுக்கு அளித்தல்.

4. தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகளின் நலன்களைக் கவனிக்கும் பொருட்டு, ஒவ்வொரு வருடமும் ஹஜ்

தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புதல்.

5. ஹஜ் பயணத்தை மேற்கொள்ளவிருக்கும் புனிதப் பயணிகளுக்கு தேவைப்பட்டால் (ஹஜ்) கடவுச்சீட்டை பெறுவதற்கு மண்டல கடவுச் சீட்டு அலுவலகங்களுடன் ஒன்றிணைந்து பணிபுரிதல்.

6. தமிழ் மொழியில் ஹஜ்ஜும் உம்ராவும் என்ற கையேட்டியினை அச்சிட்டு ஹஜ் பயணிகளுக்கு இலவசமாக வழங்குதல்.

7. ஒன்றிய அரசு, மாநில அரசு, இந்திய ஹஜ் குழு, மும்பை முதலான பல்வேறு நிறுவனங்களுடனும் மற்றும் பிற நிறுவனங்களான சவூதி அரேபியன் ஏர்லைன்ஸ், ஏர் இந்தியா, இந்திய விமானங்களின் ஆணைக்குழு, சுங்கம், குடியேற்றம், விமான போக்குவரத்து பாதுகாப்பு நிறுவனம் ஆகியவற்றுடனும் மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்து ஹஜ் விமான

ஏற்பாடுகளை சீரிய முறையில், சிக்கலின்றி வெற்றிகரமாக நடைபெறுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை செய்தல்.

8. சென்னை-ஜித்தா-சென்னை நேரடி ஹஜ் விமானங்களை இயக்குவதற்குத் தேவைப்படும் உதவி ஏற்பாடுகளான தங்கும் வசதி மற்றும் தங்குமிடத்திலிருந்து விமான நிலையம் மற்றும் திரும்பி வருவதற்கு போக்குவரத்து வசதி முதலியவற்றை அளித்தல்.

9. புனிதப் பயணிகள் பயனடையும் பொருட்டு, தடுப்பூசி மற்றும் புத்தறிவுப் பயிற்சி முகாம்கள் பல்வேறு மாவட்ட/வட்ட தலைமை இடங்களில் நடத்துதல்.

10. ஹஜ் புனிதப் பயணம் தொடர்பான இதர இடைநிகழ்வு பணிகள்.

### 25.3. ஹஜ் புனிதப் பயணத்திற்கான ஏற்பாடுகள்

தமிழ் நாடு மாநில ஹஜ் குழு, சிறுபான்மையினர் விவகாரத்துறை

அமைச்சகம்/இந்திய ஹஜ் குழுவின் வழிமுறைகளின்படி, விண்ணப்பங்களுக்கான அழைப்பு, இந்திய ஹஜ் குழுவிற்கு செலுத்தவேண்டிய கட்டணங்கள் குறித்து அறிவுரைகள் அளித்தல், பயண ஆவணங்களை வழங்குதல், சென்னையில் தற்காலிக தங்குமிட வசதி அளித்தல் முதலிய பல்வேறு பணிகளை தமிழ் நாடு ஹஜ் சர்வீஸ் சொசைட்டி மற்றும் இதர தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் இக்குழு மேற்கொள்கிறது.

மேலும் விமான இயக்கம், தங்குமிடங்களில் சோதனைக் கூடங்கள், குடியேற்றம் மற்றும் சுங்கத் தீர்வு, தங்குமிடங்கள் மற்றும் விமான தளம் ஆகியவற்றில் பாதுகாப்பு, விமான தளத்திற்குச் செல்ல பயணிகளுக்கு போக்குவரத்து வசதி முதலான இதர பணிகளையும் இக்குழு ஒருங்கிணைத்து செயலாற்றுகிறது.

இந்திய ஹஜ் குழுவின் முழுமையான அறிவுரைகளின்படி, மாநில ஹஜ் குழு செயல்படுகிறது. பயணிகளைத் தேர்ந்தெடுத்தல், பயணிகளுக்கான பயண அட்டவணையை இறுதி செய்தல், தங்குமிடங்கள் ஒதுக்குதல் முதலிய நேர்வுகளில் வெளிப்படை தன்மையுடன் இக்குழு செயல்படுகிறது.

## 25.4. அரசால் வழங்கப்படும் மானியங்கள்/ உதவிகள்

### 25.4.1 மாநில அரசின் ஹஜ் மானியம்.

தமிழ் நாட்டைச் சார்ந்த இஸ்லாமிய பெருமக்கள் தனது மார்க்கத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றான ஹஜ் கடமையை நிறைவு செய்யும் பொருட்டு, முதல்முறையாக ஹஜ் பயணம் மேற்கொள்ளும் தமிழ் நாடு ஹஜ் பயணிகளுக்கு ஹஜ் மானியம் வழங்கும் திட்டத்தை தமிழ் நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. கடந்த ஆண்டு இத்திட்டத்திற்காக

ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஹஜ் 2023–க்காக 3987 ஹஜ் பயணிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக மானியத் தொகை செலுத்தப்பட்டது. ஹஜ் 2024–க்காக 5728 ஹஜ் பயணிகளுக்கு அவர்களது வங்கிக் கணக்கில் நேரடியாக மானியத் தொகை செலுத்தப்பட்டு வருகிறது.

2024-2025 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.10 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25.4.2 நிர்வாக மானியம்**

தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவின் நிர்வாக செலவுகளுக்காக தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மானியம் வழங்கி வருகிறது. பணியாளர்களுக்கு ஊதியம் அளித்தல், சொத்து வரி, மின்சார செலவினம், குடிநீர் மற்றும் வடிகால் வரி முதலிய நிர்வாக செலவினங்களுக்காக தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு, ஒவ்வொரு

ஆண்டும் தமிழக அரசு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் வழங்குகிறது. அதன்படி, 2023-2024 ஆம் ஆண்டிற்கு நிர்வாக மானியமாக ரூ.50 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டது.

2024–2025-ஆம் ஆண்டிற்கு, இந்நிர்வாக மானியம் ரூ.80 இலட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

### 25.4.3 ஹஜ் தொண்டர்கள் அனுப்புவதற்கு மானியம்

ஹஜ் புனித பயணிகளுக்கு சேவையாற்ற ஹஜ் தொண்டர்களை சவூதி அரேபியாவிற்கு அனுப்புவதற்கு தேவைப்படும் செலவினத்தை அரசு, தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு மானியமாக அளிக்கிறது. 2023–ஆம் ஆண்டில் தமிழ் நாடு ஹஜ் பயணிகளுக்கு உதவி செய்வதற்காக 10 ஹஜ் தொண்டர்கள் சவூதி அரேபியாவிற்கு அனுப்பப்பட்டார்கள்.

2024–2025 ஆம் ஆண்டிற்காக இத்திட்டத்தின்கீழ் ரூ.10.29 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**25.4.4 இதர மானியங்கள்**

குழு உறுப்பினர்கள் குழுவின் கூட்டங்களில் கலந்து கொள்ள வருகை புரிவதற்கான பயணப்படி மற்றும் தினப்படிக்கான செலவினத்தையும் தமிழக அரசு ஈடு செய்கிறது. மேலும் தமிழ் நாடு மாநில ஹஜ் குழு சீரிய முறையில் செயல்பட தொடரா செலவினங்களில் சில உபகரணங்களை வாங்க, ஒவ்வொரு ஆண்டும் தமிழக அரசு மானியங்களை அளிக்கிறது. அதன்படி, தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்காக ஒரு நகல் எடுக்கும் இயந்திரம் வாங்குவதற்காக 2023-2024-ஆம் ஆண்டில் ரூ.1.54 இலட்சம் தமிழ் நாடு மாநில ஹஜ் குழுவிற்கு அரசால் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது.

2024–2025 ஆம் ஆண்டிற்காக ரூ.0.80 இலட்சம் இத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**முடிவுரை**

சிறுபான்மையினர் அவர்களுக்குரிய பங்கைப் பெறுவதற்கு இந்த அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளித்து வருகிறது. அவர்களின் குறைகளை நிவர்த்தி செய்வதிலும், தேவைகளை நிறைவேற்றுவதிலும் அரசு மிகுந்த அக்கறை செலுத்துகிறது. சிறுபான்மையினரை மேம்படுத்தவும் மற்றும் அவர்களின் நலனுக்காகவும் இவ்வரசு தொடர்ந்து பாடுபடும்.

**செஞ்சி கே.எஸ். மஸ்தான்**
**சிறுபான்மையினர் நலன் மற்றும்**
**வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர்**

# இணைப்பு

## 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடு

(ரூபாய் இலட்சத்தில்)

| துறை | வருவாய் | மூலதனம் | கடன் | மொத்தம் |
|---|---|---|---|---|
| தமிழ்நாடு வக்ஃப் வாரியம் | 1969.82 | - | - | 1969.82 |
| ஹஜ் குழு | 1061.09 | - | - | 1061.09 |
| மாநில சிறுபான்மையினர் ஆணையம் | 83.64 | - | - | 83.64 |
| சிறுபான்மையினர் நல இயக்ககம் | 3704.15 | 8417.94 | - | 12122.09 |
| தமிழ்நாடு வக்ஃப் தீர்ப்பாயம் | 123.44 | - | - | 123.44 |
| **மொத்தம்** | **6942.14** | **8417.94** | - | **15360.08** |




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 23.08.2023-ல் மாநில அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்ற கல்லூரி மாணவ மாணவியருக்கு பரிசளிப்பு விழா




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 09.01.2024 அன்று நடைபெற்ற கிறித்தவ சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்




மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 17.02.2024 அன்று
நடைபெற்ற இஸ்லாமிய சிறுபான்மையினர் நலன் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம்



தனிநபர் கடன் – பேக்கரி தொழில் – கடன் தொகை ரூ. 95,000/-



தனிநபர் கடன் – ஹார்டுவேர் ஸ்பேர் பார்ட்ஸ் தொழில் – கடன் தொகை ரூ. 95,000/-



தனிநபர் கடன் – ஹோம் அப்ளையன்ஸ் சர்வீஸ் சென்டர் கடன் தொகை ரூ. 95,000/-

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.